# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 09-07-2020 வியாழக்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண். 1**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 மிஷன் மருத்துவமனை அருகாமையில் காமராஜ் தெருவிற்கு செல்லும் சாலை சிமெண்டு காங்கிரீட் தளம் அமைத்து சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.2.20 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 28-05-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயச்சந்திரன் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2 | திரு.P. ஜெயப்பிரகாஷ் | மதிப்பீட்டை விட 0.011% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.P. ஜெயச்சந்திரன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3545**
**அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண். 2**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 காட்டுவிளை பகுதியில் புதிதாக 3 எண்ணம் தெரு மின் விளக்குகள் அமைப்பதற்கு முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் திரு.பொன். சகாதேவன் கோரியதை தொடர்ந்து மின் விளக்குகள் அமைப்பதற்குரிய மதிப்பீட்டு கட்டணம் தெரிவிக்க மின்வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. உதவி பொறியாளர், மார்த்தாண்டம் மின்வாரியம் அவர்களின் 22-06-2020-ம் நாளய கடிதத்தில் மேற்படி 3 தெரு மின்

விளக்குகள் அமைப்பதற்கு மதிப்பீட்டு கட்டணம் ரூ.12700/.-ஐ 6-7-2020 தேதிக்குள் மின்வாரியத்திற்கு செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டு கட்டணம் ரூ.12700/- மின்வாரியத்திற்கு செலுத்தவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3546**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 3</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான சப்பாத்து நீரேற்று நிலையத்திற்கு Liquid Chlorination வினியோகம் செய்து பொருத்தும் பணி ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 29-05-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | Rowkal & Co,<br>Madurai | மதிப்பீட்டை விட 1.79% குறைவு |
| 2 | Ananda Enterprises,<br>Madurai | மதிப்பீட்டை விட 6.54% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 Rowkal & Co கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3547**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 பனங்கூடல்விளை பகுதியில் PVC பைப் லைன் அமைத்து.Sluice வால்வு பொருத்தும் பணி ரூ.1.60 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 29-05-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.M. ஷஜி, தேவிகோடு | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | திரு.C. சுரேஷ் | மதிப்பீட்டை விட 0.76% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.M. ஷஜி என்பவரால் மதிப்பீட்டு விகிதத்தில் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3548**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 5</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் உரக்கிடங்கில் சேகரமாகும் குப்பைகளை கொட்ட போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் JCB இயந்திரம் மூலம் குப்பைகளை அகற்றிட 30-06-2020-ல் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | மணிக்கூர் ஒன்றுக்கு | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | CRRA General Contracting Private Ltd., Madichal Post | JCB மணிக்கூர் ஒன்றுக்கு | 1100 |
| | | Tipper Trip - 1-க்கு | 2200 |

| | | | |
|---|---|---|---|
| 2 | Raj Engineering Works,<br>Padanthalumoodu | JCB மணிக்கூர் ஒன்றுக்கு<br>Tipper Trip - 1-க்கு | 750<br><br>1900 |

அ.கு.:- வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2-க்கு கேட்டுள்ள குறைந்த விலைப்புள்ளிக்கு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3549**

**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 6</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் உரக்கிடங்கில் மக்கும் குப்பை, மக்காத குப்பை ஆகியவற்றை தனித்தனியாக Biomining முறைப்படி பிரிக்கப்பட்டு அவற்றை உரமாக பயன்படுத்துதல் மற்றும் Plastic பொருட்களை சிமெண்டு ஆலைகளுக்கு பயன்படுத்துதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிகளுக்காக தினசரி பத்து நபர்கள் அப்பகுதியில் வேலை பார்த்து வருகின்றனர். இப்பணியாளர்களின் உடைமைகள் மற்றும் வேலைக்கு பயன்படுத்தப்படும் கருவிகள் அவ்வப்போது திருடு போகிறது. மேலும் உரக்கிடங்கின் பிரதான வாயிலை உடைத்து சமூக விரோதிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட சம்பங்களை தடுக்கும் வண்ணம் அப்பகுதியில் 4 எண்ணம் CCTV கேமரா பொருத்தி கண்காணித்திட உத்தேச மதிப்பீடு ரூ.55,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கேமராக்கள் அமைப்பதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3550**

**அனுமதிக்கப்படுகிறது**

## குழித்துறை நகர்மன்றத்தின் 28-07-2020 செவ்வாய்கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண். 1**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள 45KVA கிர்லோஸ்கர் ஜெனரேட்டர் பழுது நீக்கம் செய்யும் பணி ரூ.70,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 29-05-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | R.J. Power, Marthandam. | மதிப்பீட்டை விட 0.33% குறைவு. |
| 2 | Annai Generators Spares & Service, Nagercoil. | மதிப்பீட்டை விட 3.38% அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 R.J. Power கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3551**
**அனுமதிக்கலாம்**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN75M.4923-ற்கு 2020-2021-ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்ய 29-05-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி

கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு ரூபாய் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/S. கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில். | 25000 | மதிப்பீட்டை விட 6.25% குறைவு. |
| 2 | M/S.அகூஷயா மோட்டார்ஸ், நாகர்கோவில். | | மதிப்பீட்டை விட 4.46% அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 கணேஷ் மோட்டார், நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3552**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 3</u>**

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கிருமி நாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் மேலும் வாங்க வேண்டியுள்ளதால் உத்தேச செலவினத்தொகை ரூ.10,00,000/- நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.19/2020/அ2.

**நகர்மன்ற தீர்மான எண் : 3553**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN75AL-6196-ன் Head LIght சரியாக எரியாத காரணத்தால் இரவு நேரங்களில் வாகனத்தை இயக்க சிரமமாக இருந்த காரணத்தினால் அவசர அவசியம் கருதி Betro Car Jewels நிறுவனத்திடமிருந்து புதிய Head Light Set, Bulb 4 எண்ணம் மற்றும் ஆணையாளர் பெயர் பலகைபொருத்திய வகைக்கு ரூ.7300/- Betro Car Jewels மாத்தாண்டம் நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி தொகை வழங்குவதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3554**
**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சி பகுதிக்கு குடிநீர் வினியோகம் செய்ய பதிக்கப்பட்டுள்ள வினியோக குழாய் 160mm pvc பைப் மார்த்தாண்டம் அம்மன்கோவில் அருகிலுள்ள மேம்பாலம் Pillar No.88, 89, 85, 84 ஆகிய இடங்களில் உடைப்பு ஏற்பட்டு அருகிலுள்ள குறுக்கு தெருவிலுள்ள வீடுகளுக்கு குடிநீர் கிடைக்காத வண்ணம் உள்ளதாலும், குழித்துறை கல்லுகெட்டி பாலம் அடிபகுதியில் செல்லும் 100mm Pipe பதிக்கப்பட்டு பல ஆண்டுகளாகியுள்ளதால் பல இடங்களில் துருபிடித்து பழுதடைந்து தண்ணீர் வீணாகுவதால் புதிதாக 100mm GI பைப் பதிக்கவும், குழித்துறை கல்பாலத்தடி அம்மன்கோவில் அருகில் Pumping line 125mm GI Pipe துருபிடித்து பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாவதால் அதனை சீரமைத்து புதிதாக 125mm GI Pipe அமைக்கவும், நேசமணி பாலம் நகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் நுழைவு வாயில் அருகிலுள்ள 160mm, 140mm PVC பைப் நெடுஞ்சாலைத் துறையினரால் மேற்கொள்ளப்படும் தடுப்பு சுவர் கட்டும் இடத்தில் அமைந்துள்ளபடியால் அதனை இடமாற்றி புதிதாக குழாய் அமைக்கவும் ரூ.2,10,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, குடீநீர் அவசியம் கருதி பிரிவு (15)-ன்கீழ் இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.P. ஜெயச்சந்திரன் மூலம் பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிட்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

குடிநீர் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடப்பட்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3555**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 6</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.21 திருவனந்தபுரம் ரோடு, ஐசக் மருத்துவமனை அருகில் நகர சார் ஆய்வாளரின் அறிக்கையின்படி சர்வே எண்.C5/118 நகராட்சி புறம்போக்கு 0.00.52 ஏர் நகராட்சிக்கு சொந்தமான இடம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தினை தனி நபரால் ஆக்கிரமிப்பு செய்து சுற்றுசுவர் கட்டியிருந்ததை நகராட்சியால் ஆக்கிரமிப்பினை அகற்றி காலியிடமாக உள்ளது. எனவே தனி நபர் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யாதவாறு மேற்படி காலியிடத்தில் கட்டிடம் கட்ட நகரமைப்பு ஆய்வாளரின் அறிக்கையின்படி கடை கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.8,60,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கும்.
அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1094/2020/இ1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3556**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 7</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான 6KV Numeric UPS பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு, சுகாதாரப் பிரிவு மற்றும் கணினி வசூல் மையத்திற்கும் 2017-ம் ஆண்டு வாங்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் 2015-ம் ஆண்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட 5KV Online UPS கணினி பிரிவு பொது பிரிவு மற்றும் ஆணையாளர் அறைக்கு வைக்கப்பட்டுள்ள கணினிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

தற்போது இரண்டு UPS-களும் Current Cut ஆகும் போது UPS தானே Off. ஆகிறது இதனால் கணினிகளும் தானே Off ஆகி பழுதுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. UPS-களின் warrenty காலம் முடிவடைந்துள்ள நிலையில் அலுவலக அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு இரண்டு UPS-களையும் சரி செய்திட தொழில் நுட்ப வல்லுநர்களால் ஆய்வு செய்த போது 6 KVA Online UPS-3 எண்ணங்களில் 5 KVA Online UPS-1 எண்ணம் நல்ல முறையில் இயங்குவதாகவும் 6 KVA Online UPS-1-யை சரி செய்ய முடியாத நிலையில் 6 KVA Online UPS-1-யை புதிதாக வாங்கவும் 6 KVA Online UPS-1 எண்ணம் பராமரிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,90,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசரம் மற்றும் அலுவலக நலன் கருதி ரூ.3,90,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.926/2020/இ1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3557**

**அனுமதிக்கலாம்**

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள மின் இணைப்பு எண்.181-004-1185 பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றி புதிய மின் மீட்டர் பொருத்துவதற்கு மின்வாரியத்திற்கு ரூ.6656/- செலுத்த மின்வாரியம், மார்த்தாண்டம், இளநிலை பொறியாளர் அறிவுறுத்தியதின்படி மேற்படி தொகையினை குடிநீர் நிதியில் செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி மின்வாரியத்திற்கு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கும்.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.925/2020/இ1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3558**

**அனுமதிக்கலாம்**

**<u>பொருள் எண். 9</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான 21 வார்டுகளிலும் உள்ள மின் விளக்குகள் பராமரிப்பு செய்ய மின்பணியாளர் (Wire Man-2 Nos. (Helper) உதவியாளர் -1 No. மட்டுமே உள்ளனர். நகராட்சியில் மொத்தம் 1677 Nos. தெருவிளக்குகள் உள்ளன. அவற்றை பராமரிப்பதற்கு போதிய மின் பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் 3 மின் பணியாளர்களை பணியில் அமர்த்தி தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

<u>நகராட்சி தெருவிளக்குகள் விபரம்</u>

| | | |
|---|---|---|
| 1) | 40W Tube Light Fittings | - 1102 Nos. |
| 2) | 150W Sodium Vapour Fittings | - 150 Nos. |
| 3) | 250W Metal Halide (High Mast -3 Nos.) | - 48 Nos. |
| 4) | 400W Metal Halide (High Mast -2 Nos.) | - 42 Nos. |
| 5) | 85W (CFL Fittings) | - 101 Nos. |
| 6) | 35W (CFL Fittings) | - 210 Nos. |
| 7) | 50W LED Street Light Fittings | - 24 Nos. |
| | | 1677 Nos. |

நகராட்சிக்கு ஒராண்டு தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின்பொருட்கள் மற்றும் மதிப்பீடு விபரம் கீழ்வருமாறு.

ஒராண்டிற்கு தெருவிளக்கு பராமரிப்பிற்கு மின்சாதன பொருட்கள் ரூ.30,00,000/-ற்கு வாங்கப்படுகிறது.

மின்பணியாளர்களின் மாத ஊதியம்

| | | |
|---|---|---|
| 1. | மின்கம்பியாளர் 1x 2 x 40,000 | = 80,000 |
| 2. | மின்கம்பி உதவியாளர் 1x 1 x30,000 | = 30,000 |
| | மொத்தம் | 1,10,000/- மாதம் |

ஒராண்டு மின்பணியாளர்களின் மொத்த ஊதியம் 1,10,000/- x 12 = 13,20,000/-

ஒராண்டிற்கான மொத்த மின் உதிரி பாகங்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கு ஆகும் செலவினம் ரூ.43,20,000/- ஆகும். தனியார் மூலம் தெருவிளக்கு பராமரிக்க மின் சாதனங்கள் வாங்குதல் மற்றும் ஆள்கூலி உள்பட ஆகும் உத்தேச செலவினம் ரூ.29.22 லட்சம் ஆகும். இது நகராட்சி பணியாளர்களால் பராமரிப்பு மேற்கொள்ளும் போது ஆகும் செலவினத்தை காட்டிலும் குறைவாக இருப்பதினால் தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது.

அடிப்படை வசதி பணிகளான திடக்கழிவு மேலாண்மை திட்டம், சாலை பணிகள், பாலங்கள் பராமரிப்பு, குடிநீர் வினியோகம் மற்றும் பிற பணிகளையும் தனியார் மயமாக்கி சீறிய முறையில் செயலாக்கம் செய்திட அரசு வழிகாட்டி நெறிமுறைகள் வகுத்துள்ளதாகவும் தனியார் மயமாக்குவதின் மூலம் ஏற்கனவே பணியில் உள்ள ஊழியர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தனியார் மயமாக்கம் செய்வதற்கு சாத்திய கூறுள்ள பணிகளை கண்டறிந்து உரிய கருத்துருக்களை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் ஒப்புதல் பெற கடிதம் அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அரசு விதிப்படி 29.22 லட்சம் செலவாகும். இத்தொகைக்கு மிகாமல் தெருவிளக்கு பராமரிப்பு பணியை தனியார் மயம் ஆக்கலாம். தெருவிளக்கு பராமரிப்பு பணியில் தற்போது பணிபுரியும் ஊழியர்களை நகராட்சி குடிநீர் பணி பிரிவில் காலியாக உள்ள இடங்களில் மாற்றுப்பணி அடிப்படையில் பயன்படுததிக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

1) நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் கடிதங்களின் அடிப்படையில் இந்நகராட்சி தெருவிளக்கு பராரிப்பு பணியினை தனியார் மயமாக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தனியார் மயமாக்க ஒரு ஆண்டுக்கு செலவுத்தொகை ரூ.29.22 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் மயமாக்கும் செயற்குறிப்பிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் ஒப்புதல் பெற்று செயல்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

4) நகராட்சியால் பராமரிக்கப்படும் பொழுது ஒருவருடத்திற்கு ரூ. 43,20,000/- வருகிறது. தனியார் மயம் செய்யும் பொழுது ரூ.29.20 லட்சம் வரை வருகிறது. இதனால் நகராட்சிக்கு வருவாய் செலவு ரூ-14,00,000/- சேமிப்பாகிறது. எனவே அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3559**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 10</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN.74W.0236-ற்கு 2020-2021-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்ய 21-07-2020-ல் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/S. கணேஷ் மோட்டார்ஸ் ஒர்க்ஸ், நாகர்கோவில். | 62045 | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| 2 | M/S. அசியா மோட்டார்ஸ், நாகர்கோவில். | | மதிப்பீட்டை விட 1.46% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் கணேஷ் மோட்டார்ஸ் நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3560**
**அனுமதிக்கப்படுகிறது**

ஒப்பம்/- திரு. எஸ். மூர்த்தி,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.